**O.S.No.225/2018**

**PW1 :** **கிருஷ்ணவேணி** தேதி 19.11.2025

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்துக்கள் எனது கணவருக்கு பூர்வீக சொத்துக்களா என்றால் என் கணவரின் தகப்பனார் கிரயம் வாங்கிய சொத்துக்கள். எனது மாமனார் பெயர் செங்கோட கவுண்டர் என்றால் சரிதான். என்னுடைய மாமனார் செங்கோடகவுண்டரின் தம்பி பெயர் முத்துசாமி கவுண்டர். அந்த முத்துசாமி கவுண்டரின் மனைவி மாராயம்மாள் 5ம் பிரதிவாதி. 5ம் பிரதிவாதி மாராயம்மாள் தற்போது இறந்துவிட்டார், அவர் வழக்கு தாக்கல் செய்யும் போது உயிரோடு இருந்தார். மாராயம்மாள் இறந்ததை குறித்து இவ்வழக்கில் பிராது திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மாமனாருக்கு சண்முகம், தங்கவேல், பாக்கியம் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான், தங்கவேல் என் கணவர். சண்முகத்தின் வாரிசுகள் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். பாக்கியம் இறந்துவிட்டார், அவருடைய கணவரும் இறந்துவிட்டார். பாக்கியத்திற்கு மூர்த்தி என்ற மகன் உண்டு. மூர்த்தியும் இறந்துவிட்டார். மூர்த்திக்கு பவித்ரா என்ற மகளும், ஹரிஷ் என்ற மகனும் உள்ளார்கள். அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. எனது மாமனாரின் சொத்துக்களில் அவரது வாரிசுகள் அனைவரும் பங்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி செங்கோடகவுண்டரின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்படுகிறது என்றால் அது எனக்கு தெரியாது. என் மாமனாரும், அவரது சகோதரர் முத்துசாமி கவுண்டரும் கூட்டாக சேர்ந்து கிரயம் வாங்கவில்லை என்றால் சரிதான். செங்கோடகவுண்டர் 5 கிரயம் மூலம் சொத்துக்களை வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 15 செண்ட் வாங்கினார். என் மாமனார் கிரயம் வாங்கும் போது தனியாக செக்குபந்தி கண்டு கூடிய விஸ்தீரணத்தை தனியாக வாங்கி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் தாவாவில்

சொல்லியவாறு பொது சுவாதீனத்தில் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது மாமனார் மேற்படி 5 கிரய பத்திரங்கள்படி 1 ஏக்கர் 90-3/4 செண்ட் வாங்கினார் என்றால் பத்திரத்தை பார்த்தால் தான் தெரியும். 5 பத்திரங்களிலும் உள்ள சொத்தை சேர்த்தால் மேற்படி 1 ஏக்கர் 90-3/4 செண்ட் வருகிறது என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனார் 01.06.1968 ல் 6 முதல் 8 பிரதிவாதிகளின் தந்தை முத்துசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 25 சென்ட்டை விற்றுவிட்டார் என்றால் சரிதான். பின்னிட்டு அதே விஸ்தீரணத்தை 26.02.1969 ல் என் மாமனாருக்கு விற்றுவிட்டார் என்று சொன்னால் பத்திரத்தில் தான் எழுதி கொடுத்துள்ளார், ஆனால் பூமியை சுவாதீனத்தில் கொடுக்கவில்லை. 1969 ல் இருந்து நாளது வரை மேற்படி சொத்தை சுவாதீனம் கொடுக்கும்படி முத்துசாமிகவுண்டரிடமோ அவரது வாரிசுகளிடமோ கேட்டு நடவடிக்கை எடுத்து இருக்கிறேனா என்றால் எடுக்கவில்லை. முத்துசாமிகவுண்டர் என் மாமனாருக்கு எழுதி கொடுத்த 25 சென்ட்டை பொறுத்து சுவாதீனம் கொடுக்கவில்லை என்று வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. முத்துசாமிகவுண்டர் 19.05.1965 ம் தேதிய கிரயபத்திரத்தின்படி 49-1/2 செண்டும், 24.06.1962 ம் தேதிய கிரயபத்திரத்தின்படி 7 செண்டும், 11.05.1977 ம் தேதிய கிரயபத்திரத்தின்படி 15 செண்டும், 18.05.1984 ம் தேதிய கிரயபத்திரத்தின்படி 61 செண்டும், ஆக மொத்தம் 1 ஏக்கர் 32 செண்ட் என்றால் சரிதான். நாச்சிமுத்துகவுண்டருக்கு 71 செண்ட் கிரயம் வாங்கியிருக்கிறாரா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி நாச்சிமுத்துகவுண்டரிடமிருந்து லோகநாதன் கிரயம் வாங்கியிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. நாச்சிமுத்துகவுண்டர் தாவா சொத்தின் கூட்டு பங்குதாரர் தான். அவர் கூட்டுபங்குதாரர் அல்ல என்றால் சரியல்ல. செங்கோட கவுண்டர் மற்றும் முத்துசாமி கவுண்டர் கிரயம் வாங்கிய பிறகு கிணற்று பாசனம் மூலம் அவரவர்கள் தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான, தோராயமாக அனுபவத்தில் இருந்து வந்தார்கள். எனது மாமனாரும், முத்துசாமி கவுண்டரும் பொழிபோட்டு தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் நான்கு கல் நட்டு தோராயமாக அனுபவித்து வந்தார்கள். வழக்கிற்காக தோராயமாக அனுபவித்து வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும்,அவர்கள் தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நாச்சிமுத்துகவுண்டரின் வாரிசுகள் துரைசாமி மற்றும் முத்துசாமி என்றால்

அது எனக்கு தெரியாது. இந்த வழக்கில் பாக்கியத்தின் வாரிசுகள் சேர்க்காததால் நான் கோரும் பங்குரிமை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நாச்சிமுத்துகவுண்டர் 71 சென்டை நிறைய பேர்களுக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. 5 முதல் 8 பிரதிவாதிகள் நாச்சிமுத்துகவுண்டரின் வாரிசுகள் என்று நான் சொல்லியிருப்பது தவறு என்றால் அது எனக்கு தெரியாது. நாச்சிமுத்துகவுண்டருக்கும், 5 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், நான் தவறாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. செங்கோட கவுண்டர், நாச்சிமுத்துகவுண்டர், முத்துசாமி கவுண்டர் ஆகியோர் தனித்தனியாக கிரயம் பெற்றுள்ளதால் அந்த சொத்தில் நான் பங்குரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. ஈரோடு முதல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.452/2015 வழக்கு தாக்கல் செய்து 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு இடையே தாக்கல் செய்யப்பட்டு அது மக்கள் நீதிமன்றத்தில் பைசல் ஆகி தீர்ப்பானது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. முத்துசாமிகவுண்டரின் வாரிசுகள் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. எனது கணவருக்கு எவ்வளவு பாத்தியம் என்றால் 1 ஏக்கர் 7 செண்ட் பாத்தியம் என்று சொல்கிறேன். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் 1 ஏக்கர் 7 செண்ட் பாத்தியம் என்று சொல்கிறேன். முத்துசாமிகவுண்டர் வாரிசுகளுக்கு எவ்வளவு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. நான் சொல்லும் விஸ்தீரணம் அவர்களுக்கு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. 5 முதல் 8 பிரதிவாதிகளுக்கு 1 ஏக்கர் 90-3/4 செண்ட் பாத்தியம் என்பதை நான் மறுக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து விபரம் தவறு என்றும், நான் கோரும் பங்கு விகிதாசாரமும் தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனாரிடமிருந்து கிரயம் பெற்றவர்களும் முத்துசாமிகவுண்டரிடமிருந்து கிரயம் பெற்றவர்களும் தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் பிட்டுபிட்டாக தோராயமாக அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்துக்களை பாகப்பிரிவினை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் எப்பொழுதும் 5 முதல் 8 பிரதிவாதிகளிடம் பாகப்பிரிவினை கோரவில்லை என்றால் சரியல்ல. நான் பாகப்பிரிவினை கோர வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நானும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் சுமூகமான உறவில் இருக்கிறோம் என்றார் சரியல்ல,

பேச்சுவார்த்தையே இல்லை. என் பேச்சுவார்த்தையை தான் நம்பியிருக்கிறார்கள் என்றும் வழக்கிற்காக எதிரிகளாக நான் சித்தரிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் சில வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. 5 முதல் 8 பிரதிவாதிகள் கூட்டுபங்குதாரர்கள் அல்ல என்றும், ஒருகால் அவர்கள் கூட்டுபங்குதார்களாக இருந்தால் அவர்கள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் யார் யாருக்கு எவ்வளவு பாத்தியம் என்று நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் விஸ்தீரணம் 3 ஏக்கர் 97 செண்ட் அல்ல என்றும், 3 ஏக்கர் 94-1/2 சென்ட் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து விபரம் தவறு என்பதால் அதன் அடிப்படையில் நான் பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வழிகாட்டு மதிப்பீட்டின் படி சொத்தின் மதிப்பீட்டை காட்டவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பீடு ரூ.38,70,000/- என்று சொல்லியிருக்கிறேன் அது எவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டுவிட்டதால் அதன் மதிப்பீடு பல மடங்கு அதிகமாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ததின் அடிப்படையில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. உண்மை சங்கதிகளோடு நான் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>9 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -</u>

இந்த வழக்கின் 9 முதல் 12 பிரதிவாதிகள் எதற்காக வழக்கில் சேர்த்தேன் என்றால் அவர்கள் யார் என்றே எனக்கு தெரியாது. அவர்கள் என்ன எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்றும் எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி லோகநாதனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 9 முதல் 12 பிரதிவாதிகள் கிரயம் பெற்றுள்ளார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 9 முதல் 12 பிரதிவாதிகள் சொத்தை வாங்குவதற்கு முன் வில்லங்கம் பார்த்து வருவாய் ஆவணங்களை பார்த்து யாருடைய சுவாதீனத்தில் உள்ளது என்பதை பார்த்து தகுந்த பிரதிபிரயோஜனத்தின் பேரில் கிரயம் வாங்கியுள்ளார்கள் என்றும்,அவர்கள்

நல்லெண்ண கிரயதாரர்கள் என்றும் சொன்னால் அவர்கள் கிரயம் வாங்கிய விபரமே எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதி மேற்படி வழக்கின் விபரத்தை 9 முதல் 12 பிரதிவாதிகளிடம் சொல்லவில்லை என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. மேற்படி 9 முதல் 12 பிரதிவாதிகள் வாங்கிய சொத்து வீட்டுமனையாக பிரிவினை செய்யப்பட்டுவிட்டது என்றால் அது எனக்கு தெரியாது. 9 முதல் 12 பிரதிவாதிகள் வாங்கிய கிரயம் சம்பந்தமாக நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றும், 4 ம் பிரதிவாதியின் சொத்தின் பேரில் நான் எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திலிருந்து நான் ஒரு பர்லாங் தூரம் குடியிருக்கிறேன். மேற்படி தாவா சொத்தை சமீபத்தில் பார்த்தேனா என்றால் பார்த்தேன், ஒரே தோட்டமாக உள்ளது. வீட்டுமனையாக பிரித்து கல் நட்டு உள்ளார்கள் என்றால் சரிதான், அதை பார்த்து தான் வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி சொத்தை விற்பனை செய்ய கூடாது என்று சார்பதிவாளர் அலுவலகத்தில் தடங்கல்மனு எதுவும் கொடுக்கவில்லை, காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். பின்னிட்டு வழக்கை தாக்கல் செய்து உள்ளேன். இவ்வழக்கை என் கணவரால் நடத்தப்படாத நிலையில் தள்ளுபடியான விபரம் தெரியுமா என்றால் தெரியும், அது எங்களால் ஏற்படவில்லை. கிரயதாரர்களிடமிருந்து பணம் பறிக்கும் எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவில் யார் யாருக்கு எவ்வளவு பாத்தியம் என்றும், உறவுமுறையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் போட்டுள்ள வழக்கே முரணாக உள்ளது என்றும் சொத்து விபரம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. 9 முதல் 12 பிரதிவாதிகள் கிரயம் வாங்கி வீட்டுமனைகளாக பிரித்த விபரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக எனக்கு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.